நொதேன் இன்ஸ்ரிரியூப்
சுண்டுக்குளி.
A/L 87
இரசாயனம்: சிவசோதி
தாவரவியல்: குணசீலன்
விலங்கியல்:
இளங்கோவன்
பௌதிகம்; பத்மநாதன்
கிழமை நாட்களில்
4 நாட்கள்
மீட்டல் வகுப்பு
ஆரம்பம் 10-12-86

Registered as a newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

நொதேன் இன்ஸ்ரிரியூட்
சுண்டுக்குளி.
A/L -- 87
DAY CLASS
பொருளியல்:
கிருஷ்ணனந்தன்
வியாழன் காலை 7-30 மணி
கணக்கியல்:
மரியதாஸ்
வெள்ளி காலை 7-30 மணி
ஆரம்பம்: 10-12-86

கடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ கார்த்திகை மீ 23 உ. செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு ஆகிர் பிறை 06 (09-12-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 1₁

பெரிய அளவிலான இராணுவத் தாக்குதலை ஆரம்பிக்க

திடுக்கிடும் சம்பவம்

# வடபகுதி முகாம்களில் கறுப்புப் படைகள் குவிப்பு

## யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதிகளை தம்வசமாக்கவும் திட்டம்

யாழ்ப்பாணம், டிச- 9

எந்த நேரத்திலும் மிகப் பெரியதான இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்கக்கூடியதாக வட பகுதியில் உள்ள பல இராணுவ முகாம்களில் கறுப்புப் (கஜபாகு) படைகள் குவிக்கப்பட்டுள்ளன.

கெரில்லா தாக்குதல்களுக்கு நின்று பிடித்து, கடுரமான எதிர்த் தாக்குதல்களை நடத்துவதில் தீவிர பயிற்சி பெற்றவர்களே கஜபாகு படைப் பிரிவினர் ஆவர். இவர்களும் கறுப்புச் சீருடை அணியைச் சேர்ந்த ஓர் இராணுவப் பிரிவினர்.

சர்வதேசப் புகழ்பெற்ற 'ராய்ட்டர்' செய்தி ஸ்தாபனம் இத் திடுக்கிடும் தகவலை நேற்று வெளியிட்ட தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

யாழ்ப்பாணம் கோட்டை முகாமை அண்டியுள்ள பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதும் கஜபாகு படையினரின் குறிக்கோளாக இருக்கும்

இதற்காக யாழ் கோட்டை முகாமிலும், சிங்கப் படைப் பிரிவினர் வாபஸ் வாங்கப்பட்டு கஜபாகு படைப் பிரிவினர் விரைவில் அனுப்பப்பட இருக்கின்றனர்.

இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி 'ராய்ட்டர்' செய்தி ஸ்தாபனம் இத் தகவலை வெளியிட்டது.

அடுத்த மாதம் ஒரு வரை ஒருவர் மிகப் பெரிய மோதல் ஒன்றில் எதிர்கொள்ளத் தயாராகும் விதத்தில் தமிழ்ப் போராளிகளும் இராணுவத்தினரும் வடக்குப் பகுதியில் முஸ்தீபு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டுள்ளனர் என்றும் 'ராய்ட்டர்' தனது செய்தி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இதே வேளை —

விஜே குழுவினருடன் யாழ் வந்தசமயம் 'ராய்ட்டர்' செய்தியாளர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



பாத்தியே பாத்தியே! இரண்டாம் உலகயுத்த நிலை எண்டு சொல்லிக் கொண்டே மூண்டாவது யுத்தத்துக்கு கறுப்பு இராணுவத்தைக் குவிக்கிறார்!

சணம் வாதம், சணம் பித்தம் என்கிறதுஇதைத் தான்!

## உலக மகாயுத்த அழிவு நிலையில் இலங்கை

கொழும்பு, டிச. 9

இரண்டாம் உலக யுத்தத்தில் ஜப்பான் அழிந்துபோன மாதிரி இன்று இலங்கை இருக்கிறது.

இப்படிக் கவலைப்பட்டார் ஜனாதிபதி ஜெயவர்த்தன.

அக்குரஸ்ஸ தொகுதியில் கடந்த ஞாயிறு நடந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி முன்கண்டவாறு தெரிவித்தார்.

சீரழிந்துபோன நம் நாட்டைக் கட்டி எழுப்ப 10 முதல் 12 ஆண்டுகள் போதாது. குறைந்தது 25 வருடங்கள் தேவைப்படும்.

இன்று பாதுகாப்புக்கு செலவிடும் பணத்தைக்கொண்டு ஐந்து மகாவலி அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தி இருக்கலாம்.

இப்படி ஜனாதிபதி மேலும் சொன்னார், (இ-ஐ-எ)

காத்தான்குடி கொலைகளைக் கண்டித்து

## மட்டக்களப்பில் இ. போ. ச. ஊழியர்கள் வேலை நிறுத்தம்

மட்டக்களப்பு, டிச.9

காத்தான்குடியில் இ.போ.ச. ஊழியர்கள் கொலை செய்யப்பட்டதற்குக் காரணம் தெரிவிக்கும்படி கோரி, மட்டக்களப்பு மாவட்டத்தில் இ.போ.ச. ஊழியர் காலவரையறை இன்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அரச ஊழியர்கள் வேலைக்குத் திரும்பவில்லை. ஜீ.சி.ஈ.பரீட்சை எடுக்கும் மாணவர்களை வசதியான பரீட்சைநிலையங்களில் சோதனை எழுதும்படி மாவட்டக் கல்விப்பணிப்பாளர் உத்தரவிட்டார்.

ஆரையம்பதி பகுதி பரீட்சை நிலையங்களுக்கு ஜீ.சி.ஈ. வினாத்தாள்கள் போக்குவரத்து இன்மை காரணமாக அனுப்பப்படவில்லை.

இதனிடையில்ஆரையம்பதி பகுதியில் தம்பிஐயா மோகன் (வயது 23) என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று மட்டக்களப்பு பிரசைகள் குழுவுக்கு முறையிடப்பட்டுள்ளது. (இ-எ-21)

## விளக்கம் தேவை என்கிறார் ராஜீவ்

புதுடில்லி, டிச. 8

இலங்கை அரசின் யோசனைகளில் ஒன்று அல்லது இரண்டு முக்கிய அம்சங்கள் குறித்து விளக்கங்கள் கோரப்பட வேண்டியுள்ளன.

இப்படி பிரதமர்ராஜீவ் காந்தி நேற்றுசெய்தியாளர்களிடம் தெரிவித்தார்

மற்றப்படி இலங்கை அரசின் யோசனைகள் முக்கியமான எல்லா அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளன. என்றும் பிரதமர் சொன்னார். (இ-எ)

## வவுனியாவரை 2 ரயில்கள் சேவை?

வவுனியா, டிச. 9

கொழும்பில் இருந்து வவனியாவுக்கு இரண்டு ரயில் சேவைகளை நடத்து நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது.

வவுனியா பிரசைகள் குழுவினரும், வவுனியா மாவட்ட பிரசைகள் குழுவினரும் ஏனைய

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு அலன் தம்பதியரில் காட்டிய அக்கறை சிப்பாய்கள் விடயத்தில் இல்லை

### கொழும்பு திரும்பிய விஜே கருத்து

கொழும்பு, டிச 9

இரண்டு ஸ்ரீலங்காச் சிப்பாய்களுக்குப் பதிலாக இரண்டு போராளிகளை விடுவிக்கும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் கோருவது நியாயமானதே. அரசு அலன் தம்பதிகளில் காட்டிய அக்கறை சிப்பாய்கள் விடயத்தில் காட்டவில்லையே!

இப்படி ஸ்ரீலங்கா மக்கள் கட்சிச் செயலாளர் திரு, விஜய குமாரணதுங்கா கொழும்பில் செய்தியாளர்களிடம் கவலை தெரிவித்தார்.

சிப்பாய்கள் சம்பந்தமான முழு அளவிலான பிரசார இயக்கம் ஒன்றை தென்இலங்கையில் நான் நடத்தவுள்ளேன் என்றும் திரு. குமாரணதுங்க சொன்னார்.

புலிகளினால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள இரண்டு சிப்பாய்களும் ஏழைக் குடும்பங்களில் இருந்து வந்தவர்கள். அதனால்தான் அரசு அக்கறை காட்டவில்லை.

முக்கிய புள்ளிகளின் உறவினர்களாக இருந்து இருப்பின் அரசு அதிக அக்கறை காட்டி விடுவித்

(4-ம் பக்கம் பார்க்க)

# கடற்படைப் படகு மீது கடற்கண்ணி தாக்குதல்

## தமிழ் ஈழ இராணுவம் நடத்தியது

யாழ்ப்பாணம், டிச.9

காரைநகர் கடற்படையினர்மீது நேற்று தமிழ் ஈழ இராணுவம் கடற் கண்ணி வெடித்தாக்குதல் நடத்தியது.

இத்தாக்குதலில் கடற்படையினர் ரோந்து சென்ற கடற்படைப்படகு முற்றாக சேதம் அடைந்ததாகவும் சில கடற்படையினர் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் தெரியவருகிறது

நேற்று அதிகாலை நான்கு மணியளவில் இச்சம்பவம் நடந்தது.

காரைநகர் கடற்படை முகாமில் இருந்து மூன்று அல்லது நான்கு கூலிப் படையினரோடு ஊறுகண்டி கடற்கரையை அண்டிய பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர்மீதே தமிழீழ இராணுவம் கடற் கண்ணி வெடித் தாக்குதல் நடத்தியது.

இதனைத் தொடர்ந்து காரைநகர் முகாமிலிருந்தும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டன.

இரண்டு ஹெலிக்கொப்டர்களும் இப்பகுதிக்கு விரைந்து வந்து கடும் தாக்குதல் நடத்தின.

இத்தாக்குதல்களை எதிர்த்து தமிழ் ஈழ இராணுவத்தினர் பதில் தாக்குதலில் ஈடுபட்டனர்.

சம்பவத்தில் பொதுமக்களது வீடுகள் சில சேதமடைந்ததாகவும் சிலர் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது. (இ-10)

மட்டுவில் தாக்குதல்:

## மாணவர்களில் ஒருவர் நிலை கவலைக்கிடம்

யாழ்ப்பாணம், டிச. 9

மட்டுவில் மகா வித்தியாலயத்தில் வைத்து பாதயாத்திரிகர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் காயமுற்ற நான்கு மாணவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இரண்டாம் வருட உயிரியல் பீட மாணவரான எஸ். சந்திரகுமாரே இம் மாணவர் ஆவார்.

கடந்த சனிக்கிழமை இச் சம்பவம் நடைபெற்றது.

சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த இவர் திருநெல்வேலி மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டு பின்னர் நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டார்.

இளவாலையை பிறப்பிடமாகக்கொண்ட இவர் மாணவர் அமைப்புக் குழுவின் செயற்குழு உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மட்டுவிலில் நடைபெற்ற இத் தாக்குதலில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலைச் சொத்துகளும், ஒலி பெருக்கிக் கருவிகளும் மாணவர்களின் உடைமைகளும் சேதமாக்கப்பட்டன என்று மாணவர் அமைப்புக்குழு எடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

மக்கள் விருப்பாத யோசனைகளை ஏற்க

# நிர்ப்பந்திக்கப்பட்டால் உண்ணாவிரதம்

## "த வீக்" சஞ்சிகைக்கு பிரபா பேட்டி

சென்னை, டிச. 8

எனது மக்களுக்கு நன்மை பயக்காத இலங்கை அரசின் யோசனைகளை ஏற்கும்படி இந்திய அரசோ அல்லது தமிழ் நாடு அரசோ நிர்ப்பந்திக்குமானால், நான் அதை எதிர்த்து காந்திய வழியான உண்ணாவிரதத்தை மேற்கொள்வேன்.

இப்படி தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் அறிவித்திருக்கின்றார்.

"எனது மக்களுக்காக உயிரை விடுவது என்று நான் தீர்மானித்துவிட்டேன்.

'உண்ணாவிரதம் இருந்து நான் உயிர் விடுவதை எம்மை வரவேற்று வைத்திருப்பவர்கள் விரும்பமாட்டார்கள் –

இப்படி திரு. பிரபாகரன் மேலும் தெரிவித்தார்.

'த வீக்' என்ற இந்திய ஆங்கில வார சஞ்சிகை (டிச 7-13)க்கு அளித்துள்ள பேட்டியில் திரு. பிரபாகரன் இத் தகவல்களைத் தெரிவித்தார்.

பேட்டி விவரம் வருமாறு:-

கேள்வி: பேச்சுவார்த்தை பற்றிய நிலை என்ன?

பதில்: தமிழர் தாயகம்தான் எம் அடிப்படைக் கோரிக்கை. எமது இவ்விருப்பம் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் மேற்கொண்டு பேச்சு நடத்த முடியாது.

அடிப்படையை ஏற்றுக்கொண்டால் ஏனையவற்றில் விட்டுக்கொடுத்து பேச்சுக்கள் நடத்துவதை பின்னர் யோசிக்கலாம்.

போராளிகள் மட்டும் அல்ல மிதவாதத் தமிழ்க் கட்சிகளும் இதனைத் தான் தெளிவாகக் கூறியுள்ளன.

தாயகம் பற்றித் தொடாமல் தனது யோசனைகளையே திரு. ஜெயவர்த்தன தொடர்ந்து கூறிக்கொண்டு இருந்தால் தீர்வு காணும் வாய்ப்பு எங்கே வரப் போகிறது?

கேள்வி: எல்லோரும் இலங்கையர்தான் என்று ஜெயவர்த்தன கூறுகிறார். பின்னர் தமிழர் தாயகம் என்ற கோட்பாடு எப்படிப் பொருந்தும்?

பதில்: அவரின் இந்த அபிப்பிராயத்தை ஏற்க முடியாது.

தீவில் வாழும் எல்லாரும் இலங்கையர் என்று ஜெயவர்த்தன சொல்வதானால், பின்னர் ஏன் அவரின் படையினர் தமிழ்ப் பகுதிகளில் அப்பாவித் தமிழர்களை படுகொலை செய்யவேண்டும்?

### முஸ்லிம்கள் நிலை

கேள்வி: உங்கள் தமிழர் தாயகக் கொள்கையுடன் முஸ்லிம்கள் சேர விரும்பவில்லையே மத்திய மாகாணத்தில் உள்ள தமிழர் நிலை என்ன? ஸ்ரீலங்கா பிரசா உரிமை எடுக்கத்தானே அவர்களின் தலைவர்கள் விரும்புகின்றனர்.

பதில்: இதில் முழு உண்மையே கிடையாது முஸ்லிம்கள் எம்முடன் உள்ளனர். எமது இயக்கத்தில் முஸ்லிம் இளைஞர்கள் உள்ளனர். இலங்கை அரசின் அரவணைப்பில் இருக்கும் சிலர் தான் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

மலையகத் தமிழர், வடக்கு நோக்கி இடம் பெயரவேண்டும். அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்க எம்மிடம் திட்டம் உண்டு.

கேள்வி: ஜெயவர்த்தன யோசனைகளை நீங்கள் நிராகரித்து விட்டதாலும் போராளிக் குழுக்களிடையே கருத்து வேறுபாடு உள்ளதாலும் பிரச்சினைக்குத் தீர்வு இல்லை என்று தமிழக முதலமைச்சர் இராமச்சந்திரன் கூறியிருக்கிறாரே!

பதில்: தற்போதைய இலங்கை அரசின் நிலையில் பிரச்சினைக்கு தீர்வு இல்லை என்று முதலமைச்சர் கூறுவது சரி தமிழர் அமைப்புக்களிடையே ஒற்றுமை இல்லை என்று அவர் கூறியதிலும் உண்மை உண்டு. இது துரதிருஷ்டவசமானது. எப்படியாயினும் தமிழர் தாயகம் என்பதில் முழு

(4-ம் பக்கம் பார்க்க)

# ஓமந்தை முகாம் சிப்பாய்கள் மீது இணைப்பதிகாரி கண்டிப்பு

வவுனியா, டிச. 9

ஓமந்தை இராணுவ முகாம்களில் உள்ள சிப்பாய்களை பெண்களுடன் சேஷ்டை விட வேண்டாம் என்று மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் கொப்பேக்கடுவ கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

ஓமந்தைப் பகுதிகளில் தினமும் ரோந்துப் பணியில் ஈடுபடுகிற சிப்பாய்களில் சிலர் வீடுகளில் புகுந்து பெண்கள் இருக்கிறார்களா? எனக் கேட்டு வருகின்றனராம்.

கடந்த சில நாட்களில் சில பெண்கள் இராணுவத்தினரின் தாக்குதலுக்குஇலக்கானதாகவும் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக இணைப்பதிகாரிக்கு முறையிடப்பட்டது.

அதனை அடுத்தே ஓமந்தைஇராணுவ முகாமில் உள்ள சிப்பாய்க

(4-ம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

09—12—1986

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:

10.48முதல் 12.18 வரை ராகுகாலம்:

3.18 முதல் 4.48 வரை

அட்டமி முற்பகல் 7-10 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

திருவெம்பாவை இரண்டாம்நாள்

## மாலை கட்டுவதற்கு பறித்த மலர்களுக்குள் கிடைத்த வெள்ளி வேல்!

அச்சுவேலி, டிச. 9

ஞான வைரவருக்கு மலர்மாலை கட்டிக் கொடுப்பதற்கு சிறுவன் பிரபாகரன் பறித்து வந்து வைத்த மலர்களுக்கு மத்தியில் அழகிய வெள்ளிவேல் இடைத்தது

இந்த அருட் சம்பவம் குறித்து மக்கள் தெய்வ சக்தியின் மகிமையை பக்தி உணர்வுடன் பரவலாகப் பேசிக்கொள்கிறார்கள். இப்போது பெரும் எண்ணிக்கையில் சென்று வெள்ளி வேலைத் தரிசிக்கின்றார்கள்.

இச்சம்பவம் அச்சுவேலி தம்பாலையில் உள்ள வைத்தியர் செல்லர் சதாசிவம் வீட்டில் நிகழ்ந்தது.

இச்சம்பவம் பற்றி அறியப்படுவதாவது:-

வைத்தியர் செல்லர் சதாசிவத்தின் 12 வயது மகன் பிரபாகரன் தினந்தோறும் அதிகாலையில் மலர் பறித்துவந்து மாலை கட்டி ஞானவைரவருக்குக் கொடுப்பது வழக்கம்.

கடந்த வெள்ளிக்கிழமையும் மலர்களைப் பறித்து வந்து அதற்குரிய இடத்தில் வைத்தார். மாலை தொடுப்பதற்கு ஊசி நூலை எடுத்து வந்து அமர்ந்தார். மலர்களைப் பிரித்து மாலை கோர்க்க ஆரம்பித்தார். பிரபாகரன் கையில்

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக தமிழ்ப் பாடசாலைகள்:

# எஞ்சிய இடங்களுக்கு வடக்கு, கிழக்கிலிருந்து நியமனம்

கொழும்பு, டிச.9
மலையகத்தைச் சேர்ந்த தமிழருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்ட பின்னர் எஞ்சியுள்ள தமிழ் ஆசிரிய பதவிகளுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் விண்ணப்பதாரிகளை நியமிக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் தொண்டமான், கல்வி அமைச்சரைக் கோர இருக்கின்றார்.

இத்தகவலை அமைச்சர் தொண்டமான் தன்னைச் சந்தித்த திமிலதீவு ஐக்கிய இளைஞர் கழகத் தூதுக்குழுவிடம் தெரிவித்தார்.

மலையகப் பாடசாலைகளில் மலையகப் பகுதி தமிழ் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்ட பின்னரே எஞ்சியுள்ள இடங்களுக்கு வடக்கு, கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று திமிலதீவு ஐக்கிய இளைஞர் கழகத் தூதுக்குழு விடுத்த வேண்டுகோளை அமைச்சர் தொண்டமான் ஏற்றே முன்கண்ட உறுதிமொழியை அளித்தார். (இ-எ-21)

# 84இல் சுடப்பட்டவருக்கு எதிராக 86இல் வழக்கு

## நீதிமன்றத்தில் குட்டு அம்பலம்

கொழும்பு, டிச. 9
1984 டிசம்பரில் வவுனியா முகாமில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞர் மீது 1986 ஜனவரியில் வழக்குத் தொடர்ந்த அதிசயம் கடந்த வாரம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வெளியானது.

அது பற்றிய விவரமாவது:
திருமலை, மாலையூற்று வாசியான கந்தசாமி பன்னீர்செல்வம். இவர் 4-12-84 இல் கைது செய்யப்பட்டார்.

வவுனியாவில் படை முகாமில் இவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

1986 ஜனவரியில் இவர் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தீவிரவாதிகள் பற்றித் தகவல் கொடுக்கத் தவறியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு இருந்தது.

கடந்த மாதம் இவ்வழக்கு ஆஜர் செய்யப்பட்டபோது ஒருவர் ஆஜர் செய்யப்பட்டார்.

அப்போது சந்தசாமி பன்னீர்செல்வம் இவர் இல்லை என்று நீதிமன்றத்துக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஆஜர் செய்யப்பட்டவரின் பெயர் சரவணபவன் சுந்தையா செல்வம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து நீதிபதி எச். டபிள்யூ. சேனநாயக்கா உண்மையான எதிரிக்கு என்ன நடந்தது என்பது பற்றி அறிவிக்கும்படி அரச சட்டத்தரணிக்கு உத்தரவிட்டார்.

அதன்படி அரச சட்டத்தரணி திரு. ஜே. திசைரத்ன கடந்த வியாழன் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்தார்.

உண்மையான எதிரி கந்தசாமி பன்னீர் செல்வம், வவுனியா படை முகாமில் இருந்து தப்பி ஓட முயற்சிக்கையில் சுட்டுக் கொல்லப்பட்டார்'' இப்படி அரச சட்டத்தரணி சமர்ப்பித்த அறிக்கையில் கூறப்பட்டு இருந்தது.

இதைத் தொடர்ந்து நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்தார். (இ-ஐ-எ)


எமது வாடிக்கையாளர்களே!

உங்கள் கவனத்திற்கு—

எங்கள் நிறுவனப் பெயரைச் (Hayleys Photo Print Ltd) சொல்லி Agfa பிரதி எடுத்துத் தருவதாகக் கூறி—

ஸ்ருடியோக்களிடமிருந்தும், படப்பிடிப்பாளர்களிடமிருந்தும் சில நபர்கள்—வர்ணப்படச் சுருள்களைப் பெற்றுச் செல்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

இவர்களிடம் நீங்கள் கொடுக்கும் படச் சுருள்கள் தொலைந்தாலோ, பழுதடைந்தாலோ எமது நிறுவனம் பொறுப்பேற்க மாட்டாது

எங்கள் நிறுவனத்தின் சேகரிப்புப் பைகளுடன் வரும் எமது பிரதிநிதிகளிடம் அல்லது எங்கள் நிறுவனத்திடம் நேரடியாக உங்கள் படச்சுருள்களை ஒப்படைத்து பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

(எங்கள் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சேகரிப்பு நிலையங்களாக நியமனம்பெற விரும்பும் வர்த்தக ஸ்தாபனங்கள் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்.)

ஹேலீஸ் போட்டோ பிறின்ட் லிமிட்டெட்,
380, ஆஸ்பத்திரி வீதி,
(புகையிரத நிலைய வீதிச் சந்தி)
யாழ்ப்பாணம்.



இதோ! வெளிவந்துவிட்டது!
ஹப்பி அளிக்கும்
ஜோ. எகட்டனின் தயாரிப்பில்
16 முத்தான
கிறிஸ்மஸ் பாடல்கள்
அடங்கிய கஸட்
(PRE RECORDED CASSETTEES)
உங்கள் முத்துக் குவியல்களைத் தெரிவு செய்திட முந்துங்கள்
விலை ரூபா 35/- மட்டுமே!
நாடுங்கள்:
ஜோ. எகட்டன்
செனித் மார்க்கட்டிங்
19/3, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
Zenith Ads.


ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

## யார் இந்த இனந்தெரியாத நபர்கள்?

யாழ்ப்பாணம், டிச 9
'யார் இந்த இனந்தெரியாத நபர்கள்' என்ற தலைப்பில் ஈ. பி. ஆர். எல். எவ். விடுத்த அறிக்கையின் சாரம் வருமாறு:-

'விஜிதரன் எங்கே? இயக்கங்களே பதில் சொல்லுங்கள்' எனக் கோரி யாழ் பல்கலைக் கழக மாணவர்களின் போராட்டம் தொடர்கின்றது.

இந்தியாயமான கோரிக்கையை முன்வைத்து நடைபெறும் பாதயாத்திரையில் மாணவர்களும், ஆதரவளிக்கும் பொதுமக்களும் தாக்கப்படும் சம்பவங்கள் தொடர்கின்றன.)

கரவெட்டியில் மாணவர்கள் 'இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டனர். மட்டுவிலில் அவர்கள் தங்கியிருந்த இடத்தில் எரிந்துகொண்டிருந்த மின்விளக்கு அடித்து சடைக்கப்பட்டு இருட்டுக்குள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டுள்ளனர். இதனால் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கட்டைப்பிராயில் பாதயாத்திரையை வழிமறித்து அவ்விடத்தில் செய்தி சேகரிப்பதற்காக நின்ற எமது தோழர்களின் வீடியோ கமராவைப் பறிக்க முற்பட்டதோடு பாதயாத்திரையில் வந்தவர்களையும் அநாகரிகமான முறையில் தாக்கியுள்ளனர்.

யார் இந்த இனந்தெரியாதவர்கள்? மக்களைத் தவறான பாதையில் நீண்டகாலத்திற்கு இட்டுச் செல்லமுடியாது. மாணவர்களின் போராட்டங்களைக் குழப்பி அடையும் தற்காலிகமான வெற்றிகளில் தலைகால்புரியாமல் தாண்டவமாடினால் அதற்காக ஒருநாள் கவலைப்பட வேண்டி வரும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)

# திருமலை அகதிகளுக்கு உணவுப் பொருள் நிறுத்தம்

## மட்டக்களப்பு அரச அதிபர் ஊடாக வழங்க முடியாது என்கிறார் இராணுவ அதிகாரி

மட்டக்களப்பு, டிச.9
திருகோணமலை அகதிகளுக்கு, மட்டக்களப்பு அரச அதிபர் ஊடாக உணவுப் பொருள்கள் வழங்கப்படுவதை உடனடியாக நிறுத்தும்படி இராணுவ அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

இது சம்பந்தமாக மட்டக்களப்பு அரச அதிபர் எம். அந்தோனிமுத்து புனர்வாழ்வு அமைச்சுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

இது பற்றிய விவரம் வருமாறு;
திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த 1738 தமிழ் குடும்பங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வாகரை முகாமில் தஞ்சமடைந்து இருந்தன

இவற்றில் 1443 குடும்பங்கள் தலா 500 ரூபா ரொக்கப்பணம், ஒரு மாத கால இலவச பங்கீட்டுப் பொருள்கள் ஆகியவற்றுடன் பழைய இடங்களுக்குத் திரும்பின.

மட்டக்களப்பு அரச அதிபர் ஊடாகவே தொடர்ந்தும் இலவச உணவுப் பொருள்கள் வழங்க வேண்டும் என்ற நிபந்தனையுடனே இவர்கள் பழைய இடங்களில் குடியேறினர்.

அதற்கு இணங்க அவர்கள் கதிரவெளி கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கக் கடையில் உணவுப் பொருள்களைப் பெற்று வந்தனர்.

கடந்த 2ஆம் 3ஆம் திகதிகளிலும் வழமை போல் அங்கு போய் உணவுப் பொருள்களை 125 குடும்பங்கள் பெற்றன.

அப்போது அங்கு சென்ற இராணுவ அதிகாரி, திருமலை அகதிகள் திருமலை அரச அதிபர் ஊடாகத் தான் உணவுப் பொருள் பெற வேண்டும். மட்டுநகர் அரச அதிபர் ஊடாக வழங்கப்படக் கூடாது என்று உத்தரவிட்டார்.

இதைத் தொடர்ந்து ஏனைய திருமலை அகதிக் குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்படவில்லை.

புனர்வாழ்வு அமைச்சின் உத்தரவை எதிர்பார்த்து மட்டக்களப்பு அரச அதிபர் இருக்கிறார் (இ-எ-21)

### பிரபலகேடி குண்டுவீச்சுக்குப் பலியானார்

கொழும்பு, டிச. 9
கொழும்பு பேலியகொடைப் பகுதியில் பிரபல கேடியான அர்ஜுனா என்பவர் ஒரு கோஷ்டியினரால் குண்டு வீசிக் கொல்லப்பட்டார்.

பகல் 11 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

கொழும்பு பிரதம நீதிவான நீதிமன்றத்துக்குப் போய் விட்டு, மனைவியுடன் வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயம் மேட்டுத் தெருவில் வைத்து ஓட்டோ ரிக்ஷாவில் வந்திறங்கிய கோஷ்டி ஒன்றினால் வழி மறிக்கப்பட்டார்.

பின்னர் ஓட ஓட அர்ஜுனா மீது அக்கோஷ்டி குண்டுகளை வீசியது. மனைவி காயங்களுடன் தப்பினார்.

அர்ஜுனா உடல்சிதறி உயிரிழந்தார். (இ-ஐ-எ)

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

கலந்துரையாடல் மூலம்

## காசநோய் பரவும் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியும்

சுன்னாகம், டிச. 9
காசநோயை முழுமையாக ஒழிக்க முடியாவிட்டாலும் நோயின் அறிகுறிகள் பற்றியும் அதனைத் தடுக்கும் வழிமுறைகள் பற்றியும் மக்களுடன் கலந்துரையாடி காசநோய் பரவும் வேகத்தைக் கட்டுப்படுத்துவது சாத்தியமே. வலி தெற்கு உதவி அரச அதிபர் திரு ஆ. மகாலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

காசநோய் தடுப்புச் சபையின் வலி — தெற்கு பகுதி புதிய சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இராமநாதன் கல்லூரியில் இந்த வைபவம் நடைபெற்றது

சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர் திரு கு. நடராசா பேசுகையில் 1948 இல் முதன் முதலாக இலங்கையில் காசநோய் தடுப்புச் சங்கம் உருவாக்கப்பட்டது.

சர்வதேச ரீதியிலும், தேசிய மட்டத்திலும், கிராமிய நிலையிலும் மூன்று பிரிவுகளில் இச்சங்கம் செயற்படுவதால் தான் இன்று நாட்டில் காசநோய் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது என்றார்

அதிபர் எஸ் சோதிப்பெருமாள் வரவேற்புரை நிகழ்த்தினார். 'காசநோயும் மக்கள் பங்கும்' என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரம் உரையாற்றுகையில் குக்கல், தொண்டைக்கரப்பன், இளம்பிள்ளைவாதம் ஆகியன முழுமையாக எமது பிரதேசத்தில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன என்றார் (இ - 27)

### தமிழ் சிறுவர் தினம்

பருத்தித்துறை, டிச. 9
அறவழிப் போராட்டக்குழு இம்மாதம் 15 ஆம் திகதியை தமிழ் சிறுவர் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. (இ-118)

## மதகுகளைத் திருத்த மாநகரசபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிச 9
மழை காலத்தில் வெள்ளத்தை ஓடவிடாது மறியல் செய்யும் மதகுகளை திருத்த யாழ் மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதற்கட்ட வேலையாக தேவநீர் மதகு, ஆத்திசூடி மதகு ஆகியவற்றை 50 ஆயிரம் ரூபா செலவில் உடன் திருத்தி அமைக்க மாநகரசபைமுடிவுசெய்துள்ளது. (இ-5)

### ✱ இப்படியும் நடக்கிறது

பண்டத்தரிப்பு, டிச 9
தாலிக்கொடி, காப்பு, பணம் உட்பட 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவு போயின.

பொருள்களைக் களவு கொடுத்த மூதாட்டி பிள்ளையார் கோயிலுக்குச்சென்று விநாயகப் பெருமானிடம் அழுது மன்றாடினார்

என்ன ஆச்சரியம்! மறுநாட்காலை தாலியும் கொடியும் வீட்டுக் குசினிப்பக்கத்தில் வீசப்பட்டிருந்தன.

ஆனால் கொடியில் இருந்த குதிரைமார்க் பவுண் காசுகள் மட்டும் கழற்றப்பட்டிருந்தன

இச்சம்பவம் பெரிய விளானில் நடைபெற்றது (இ-120

### மீனவர்களுக்கு நிவாரண உதவி

கிளிநொச்சி, டிச 9
கடல் வலயச் சட்டத்தின் படி கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 1078 குடும்பங்களுக்கு மார்ச் மாதம் முதல் நவம்பர் மாதம் வரையிலான காலத்திற்குரிய நிவாரண உதவிகளை கிளிநொச்சி கச்சேரி சமூக சேவைப் பகுதியினர் வழங்கியுள்ளனர்

ஏற்கனவே நிவாரணம் பெற்ற 718 குடும்பங்கள் தவிர்ந்த மிகுதி 360 குடும்பங்களுக்கான நிவாரண உதவிகள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ஜெகா- செந்தில்நாதனின் முயற்சியால் வழங்கப்பட்டன.

இவர்களுக்கான நிவாரண அட்டைகளை கிளிநொச்சி, பளை, பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் வைத்து கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் எஸ். அமிர்தலிங்கம் சமூகசேவை உத்தியோகத்தர் பொன்- நித்தியானந்தம் ஆகியோர் சம்பந்தப்பட்டவர்களிடம் கையளித்தனர். (இ-76)

### வீர மரணம்

யாழ்ப்பாணம், டிச 9
கடந்த 4ஆம் திகதி மட்டக்களப்பு முகத்துவாரத்தில் 200க்கு மேற்பட்ட படையினர் நடத்திய தேடுதலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான ஜெயம் (மோகன்—ஆரையம்பதி) வீர மரணம் அடைந்தார்.

அவருக்கு வீரவணக்கம் செலுத்திதமிழீழ[illegible] தலைப்புலிகள் இயக்கம் அறிக்கை விடுத்துள்ளது. (இ-6)

## யோண் பொஸ்கோ பெற்றோர்தின விழா

யாழ்ப்பாணம், டிச. 9
புனித யோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் பெற்றோர்தின விழா அண்மையில் நடைபெற்றது.

விழாத் தலைவராக பாடசாலை அதிபர் சிஸ்ரனிஸ்லாஸ் மேரியும் கௌரவ விருந்தினராக பேரருள் திரு. வ தியோகுப்பிள்ளை ஆண்டகையும் பிரதம விருந்தினராக பிரதம கல்வியதிகாரி திரு. கு. சோமசுந்தரமும் சிறப்பு விருந்தினராக யாழ் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தனும் கலந்துகொண்டனர்.

விழாவில் 26 நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. முதலாம் ஆண்டிலிருந்து ஆறும்ஆண்டுவரைஉள்ள மாணவர்களின் பல்வேறு நிகழ்ச்சிகள் பெற்றோரையும் மற்றோரையும் மெய்மறக்கச் செய்தன. (இ)



மக்கள் முகம்

### காசநோய் தடுப்புச்சங்கக் கிளை

சுன்னாகம், டிச. 9
வலி-தெற்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிக்கான இலங்கை தேசிய காசநோய் தடுப்புச்சங்கத்தின் கிளை உதவி அரசஅதிபர் திரு. ஆ. மகாலிங்கத்தினால் அங்குரார்ப்பணம்செய்து வைக்கப்பட்டது.

தலைவராக அதிபர் திரு. சோதிப்பெருமாளும், உதவித்தலைவர்கள் திருவாளர்கள் ஸ்ரீகாந்தநாதனும், திரு. த திருஞானசம்பந்தரும் செயலாளராக திரு த. தங்கவேலாயுதமும், உதவிச் செயலாளராக திரு. ச முருகநேசனும், பொருளாளராக திரு சபாபுஷ்பநாதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

[illegible] வாகசபை உறுப்பினர் [illegible] செய்யப்பட்டனர். (இ-27)

நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்

## பிரதம விருந்தினரின் விவரங்களை பாடசாலைகள் தெரிவிக்க வேண்டும்

பலாலி, டிச 9
பாடசாலைகளின் விழாக்கள், கொண்டாட்டங்கள் என்பனவற்றில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வோர், விசேஷ, சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வோர் ஆகியோர் பற்றிய விவரங்கள் துண்டுப் பிரசுரம் வெளியிடப்படுவதற்கு முன்பே கல்வித் [illegible] அனுமதி பெறப்பட வேண்டும்.

இதற்கான கடுமையான அறிவுறுத்தல்கள் பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சு இது பற்றி ஏற்கனவே அறிவித்துள்ள போதிலும், யாழ். மாவட்டத்தில் இப்போதே இந்த விதிகள் கடுமையாக அமுல்படுத்தப்பட உள்ளன என்று அறியப்படுகின்றது. (இ - 119)

### தபால் நிலைய ஊழியர் எண்ணிக்கை குறைக்கப்படும்

மானிப்பாய், டிச. 8
1987 ஜனவரியிலிருந்து சுன்னாகம் தபால் நிலைய ஊழியர் எண்ணிக்கை தற்போதைய எண்ணிக்கையின் அரைவாசியாக குறைக்கப்பட உள்ளதாகத் தெரியவருகிறது.

பதின்மூன்று ஊழியர்கள் வேலைசெய்யும் இக்கந்தோரில் 6 பேரை மட்டுமே வேலையில் வைத்துக்கொள்ள தபால் திணைக்களம் முடிவுசெய்துள்ளதாம். (இ-90)

### உயர்தொழில் ஆங்கிலசான்றிதழ் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், டிச 9
உயர்ஆங்கில தொழில் சான்றிதழ் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் திறந்த பல்கலைக் கழகத்தினால் கோரப்பட்டுள்ளன

இக்கற்கைநெறி பயில விரும்புவோரை விவரங்களுக்கு கொக்குவில் தொழில் நுட்ப கல்லூரியில் அமைந்திருக்கும் பிரதேச நிலைய அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு உதவிப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

விண்ணப்பப் படிவங்கள் இம்மாதம் 14 ஆம் திகதி முதல் விநியோகிக்கப்படும் என்றும் தெரிவித்தார் (இ-5)

### ஓய்வூதியர் நலன்புரிச்சங்க போட்டிகள்

நல்லூர்த் தொகுதி திருநெல்வேலி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தினர் இவ்வாண்டு நடத்திய கலைப் போட்டிகளை விஸ்தரித்து அடுத்தஆண்டுப் போட்டிகளை நடத்த உத்தேசித்துள்ளனர்.

பேச்சு, இசை, எழுத்து ஆகிய மூன்று பிரிவுகளிலும் போட்டிகள் நடைபெறும்

திருக்குறள் மனனம், யோகாசனம் ஆகிய இரு விசேஷ போட்டிகளும் நடைபெறவுள்ளன. (இ-5)

### முதலாவது பிரசாரக் கூட்டம் 13 ஆம் திகதி

அம்பாறை, டிச. 9
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தனது முதலாவது பிரசாரக் கூட்டத் தொடரை இம்மாதம் 13 ஆம் திகதி ஆரம்பிக்கிறது.

இம்மாதம் 15 ஆம் திகதி வரை இப்பிரசாரக் கூட்டங்கள் நடைபெறும்.

அக்கரைப்பற்று, நிந்தவூர், மருதமுனை, சம்மாந்துறை, ஒலுவில், சாய்ந்தமருது ஆகிய கிராமங்களில் இக் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

தேசியக் கட்சியாக தன்னைப் பிரகடனப்படுத்திய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, தன்னை அரசியல் கட்சியாக பதிவு செய்யும்படி தேர்தல் ஆணையாளருக்கு விண்ணப்பித்துள்ளது. (இ-எ-14)

### மணல்குளத்தில் உபதபால் நிலையம்

யாழ்ப்பாணம், டிச. 9
உயிலங்குளம் உபதபால் நிலையம் மணல்குளம் என்ற இடத்தில் இயங்க உள்ளது.

இப்பகுதியில் நடைபெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தை அடுத்து உயிலங்குளம் தபால் அலுவலகம் மூடப்பட்டுள்ளது. (இ-10)


இதோ! வெளிவந்துவிட்டது!
ஹப்பி அளிக்கும்
ஜோ. எகட்டனின் தயாரிப்பில்
16 முத்தான
கிறிஸ்மஸ் பாடல்கள்
அடங்கிய கஸட்
(PRE RECORDED CASSETTEES)
உங்கள் முத்துக் குவியல்களைத் தெரிவு செய்திட முந்துங்கள்!
விலை ரூபா 35/- மட்டுமே!
நாடுங்கள்:
சண்முகம் ட்ரேட்ஸ்
பிரதான வீதி,
(சின்னக்கடை சந்தி)
யாழ்ப்பாணம்.
Zenith Ads.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

ஆசையும் அகங்காரமும் அகன்றால்தான் மனமாகிற தாமரையும் மலர்ந்து பெருவாழ்வு பெறலாம்

— காஞ்சி முனிவர்

உதயன்

இல.15 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24803
மின்சார நிலைய வீதி, 22075
யாழ்ப்பாணம். 09-12-1986 க.பொ இல 23

## உதவ வேண்டிய திட்டம்

ஜெய்ப்பூர் கால் என்று சிறப்பாக அழைக்கப்படும் செயற்கைக் காலை யாழ்ப்பாணத்திலேயே பொருத்துவதற்கு வசதி செய்ய முயற்சிகள் நடக்க உள்ளன. அதற்கான ஆரம்ப ஆலோசனைகள் இடம் பெற்றிருக்கின்றன.

ஜெய்ப்பூர் கால்களை உற்பத்தி செய்வதற்கான வேலைத்தலம் ஒன்றை நிறுவுதல்; அக்கால்களை இங்கேயே வைத்துப் பொருத்துவதற்கான உபகரண வசதிகளை ஏற்படுத்துதல்.

இந்த இரண்டு கட்டத் திட்டத்தைச் செயற்படுத்தக் கொழும்பில் உள்ள ஆபத்தில் உதவுவோர் சங்கம் ஆர்வமாக இருக்கிறது.

ஜெய்ப்பூர் கால் உற்பத்தி, அதனைப் பொருத்துதல் ஆகிய துறைகளில் யாழ்ப்பாண இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கவும் பிரஸ்தாப சங்கம் முன்வந்துள்ளது.

மேற்சொன்ன ஆலோசனைகள், திட்டங்கள், ஆர்வம், விருப்பம் ஆகியன நிச்சயம் வரவேற்கப்பட வேண்டியவை. அது மட்டுமன்றி அந்தத் திட்டம் நிறைவேற சகல உதவிகளும் வழங்கப்படுவதும் அவசியமாகும்.

விபத்துக்களில் தமது கால்களை இழந்தவர்களுக்குப் பேருதவியாக இருப்பன ஜெய்ப்பூர் கால்கள். விபத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தாம் அங்கவீனம் அடைந்து விட்டதாக உணராமல் இருக்கவும், அன்றாட அலுவல்களைக் கஷ்டமின்றிச் செய்யவும் அவை துணை புரிகின்றன.

அவை எல்லாவற்றையும் விட—

கால்களை இழந்ததால் பாதிக்கப்பட்டவர்கள் சமூகத்தில் இருந்து ஒதுக்கப்படாமல் ஏனைய பிரசைகள் போல வாழ்வதற்கு உதவும் பெரும் கைங்கரியத்தையும் ஜெய்ப்பூர் கால்கள் செய்து வருகின்றன.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் தமிழ்ப் பகுதிகளில் நடக்கும் சம்பவங்களால், ஆயுதப்படையினரின் அட்டூழியங்களால் ஜெய்ப்பூர் கால்களின் தேவை அதிகரித்து வருகிறது. ஷெல் வீச்சு, துப்பாக்கிப் பிரயோகம் என்பவற்றால் கால்களை இழப்போர் எண்ணிக்கை உயர்ந்து வருவதே அதற்குக் காரணமாகும்.

அதனால், கொழும்பு சென்று ஜெய்ப்பூர் கால்களைப் பொருத்தும் நிலை தவிர்க்கப்படுவது மிகவும் நல்லது.

எனவே யாழ்ப்பாணத்தில் ஜெய்ப்பூர் கால் உற்பத்தி வேலைத்தளம் அமைத்தல், பொருத்துதல் ஆகிய திட்டங்கள் கட்டாயமாகச் செயலுருப் பெற வேண்டியவையாகும்.

ஜெய்ப்பூர் கால் உற்பத்தி வேலைத்தளத்தை தொடங்குவதற்கு ஆரம்ப நிதியாக சுமார் மூன்று லட்சம் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பணத்தை பொதுநல ஸ்தாபனங்களும், தனிப்பட்ட தனவந்தர்களும் தந்துதவினால் ஆறு மாதங்களில் வேலைத்தளத்தை அமைக்கலாம் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கருணை உள்ளம் கொண்ட அனைவரும் தம்மால் இயன்ற உதவியைச் செய்தால் மூன்று லட்சம் ரூபாவைப் பெறுவது கஷ்டமான காரியமாக இருக்காது. இதனை முன்னின்று செய்வதற்கு பொது ஸ்தாபனங்கள் உழைக்க வேண்டும்.

ஒரு கொடித் தினத்தைக் குறிப்பிட்டு குடாநாடு முழுவதிலும் நிதி சேகரித்தால் பணத்தை இலகுவில் பெற்றுவிடலாம். சிறு துளி மழை சேர்ந்து தான் பெருவெள்ளம் உண்டாகிறது.

எமது தேவைகளை நாமே பூர்த்திசெய்ய வேண்டும். நம் கையே நமக்கு உதவி. இதனை உணர்ந்து பலருக்கு மறுவாழ்வு தரக்கூடிய இத்திட்டத்திற்கு எல்லோரும் உதவ வேண்டும்.

இதனை மற்றவருக்குச் செய்யும் உதவியாகக் கருதாமல் எமக்கு நாம் செய்யும் உதவியாகக் கருத வேண்டும்.

ஏனெனில் ஷெல் எப்போது வந்தும் தாக்கலாம் என்பது இப்போது நித்திய சாத்தியம். அது போலவே கால்களை இழந்து விடக்கூடிய சாத்தியமும் நம் எல்லோருக்கும் எப்போதும் உண்டு.

கிளிநொச்சியில்

## ஆண்களை இழந்த 18 குடும்பங்களுக்கு நிவாரணம் கிடைக்கும்

கிளிநொச்சி, டிச 9

கடந்த ஜனவரி 25 ஆம் திகதிக்கும் அக்டோபர் 9 ஆம் திகதிக்கும் இடையில் இராணுவக் கெடுபிடிகளால் இறந்த கிளிநொச்சியைச் சேர்ந்த 64 குடும்பங்களுள் ஆண்களை இழந்த 18 குடும்பங்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் மூகமாக கிளிநொச்சி பிரசைகள் குழு புனர்வாழ்வு அமைச்சுடன் தொடர்பு கொண்டுள்ளது.

ஆண்களை இழந்து கஷ்ட நிலையில் வாடும் 18 குடும்பங்களது வாழ்க்கைக்கு உதவும் வகையில் 5 குடும்பங்களுக்கு மொத்தம் 25 பால் மாடுகளையும், 5 குடும்பங்களுக்கு மொத்தம் 50 ஆடுகளையும், 8 குடும்பங்களுக்கு மொத்தம் 800 கோழிக்குஞ்சுகளையும் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் சுமார் 1 லட்சத்து 67 ஆயிரம் ரூபா பணத்தைக் கொடுத்து உதவுமாறு கிளிநொச்சி பிரசைகள் குழு நோர்வே தூதரகத்துக்கு விண்ணப்பித்திருந்தது.

நோர்வே தூதரகம் இவ்வாறான உதவிகள் வழங்குவது தொடர்

(4ஆம் பக்கம் பார்க்க)

# நிக்கரகுவா -- ஹொண்டுராஸ் எல்லையில் மோதல்!

மனகுவா, டிச. 8

நிக்கரகுவா ஹொண்டுராஸ் எல்லையில் இரண்டு அரசுகளின் துருப்புக்களிடையே மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

ஹொண்டுராஸ் துருப்புக்களுக்கு அமெரிக்கத் துருப்புக்கள் உதவுகின்றன.

அமெரிக்க ஹெலிக்கொப்டர்கள் ஹொண்டுராஸ் எல்லையில் துருப்புக்களைகொண்டுசென்று இறக்கின இப்படி பி.பி.சி. வானொலி அறிவித்தது.

நிக்கரகுவா துருப்புக்கள் ஹொண்டுராஸ் எல்லைக்குள் புகுந்ததைத் தொடர்ந்தே பதில் தாக்குதல் நடத்தப்பட்டது என்று ஹொண்டுராஸ் அரசு அறிவித்தது.

அமெரிக்காவின் ஆதரவுடன் ஹொண்டுராஸ் துருப்புக்கள் நிக்கரகுவாவுக்குள் நுழைந்தன என்று நிக்கரகுவா வெளிநாட்டமைச்சர் குற்றம் சாட்டினார்.

இதனை அமெரிக்க ராஜாங்க அமைச்சு அறிவித்தது. (இ-எ)

### குற்றவாளியாகக் காணப்பட்ட அரபுக்கள்

ரோம், டிச. 3

வெடிமருந்துடன் ரோம் விமான நிலையத்தில் வைத்து பிடிபட்ட இரண்டு அரபுக்கள் இத்தாலிய நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டனர்.

பலஸ்தீன் நாட்டைச் சேர்ந்த இரண்டு பேருக்கும் தலா 8 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (இ-எ)

### சமஷ்டி அதிரடிப் படை

லாகோஸ், டிச 8

மஞ்சட் காய்ச்சலை எதிர்த்துப் போராட நைஜீரிய அரசு சமஷ்டி அதிரடிப்படை ஒன்றை நியமித்துள்ளது.

1969க்குப் பின்னர் மிக மோசமான அளவில் மஞ்சட் காய்ச்சல் அதிவேகமாக நைஜீரியாவில் பரவிவருகிறது. (இ-எ)

## ஆப்கானிஸ்தானில் அமைச்சரவை மாற்றம்

இஸ்லாமாபாத், டிச 8

ஆப்கானிஸ்தான் அமைச்சரவையில் பெரும் மாற்றங்கள் செய்யப்பட்டன.

பாபிரக்கர்மால் ஜனாதிபதி பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இம்மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

முகமது ராபீ என்பவர் பாதுகாப்பு அமைச்சராகவும் அப்துல்வாகில் என்பவர் வெளியுறவு அமைச்சராகவும் பதவி ஏற்றனர்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட இருவரும் பாபரக் கர்மால் பதவியில் இருந்த சமயம் முன்னுக்கு வந்தவர்கள். (இ-எ)

கதிரியக்கப் பாதிப்பு

### காட்டுக் கோழி இறைச்சி பரிமாறத் தடை!

டப்ளின், டிசம்பர் 8

ஐரிஷ் குடியரசில் உள்ள உணவு விடுதிகளில் காட்டுக்கோழி இறைச்சி பரிமாறப்படக்கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

ஐரிஷ் நாட்டின் மேற்குப் பகுதியில் சுடப்பட்ட இரண்டு காட்டுக் கோழிகள் அணு கதிரியக்கத்தினால் பாதிக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்தே ஐரிஷ் அரசு இத்தடை உத்தரவைப் பிறப்பித்தது.

காட்டுக் கோழிகள் ரஷ்யாவில் உக்ரேன் பகுதியில் இருந்து, அயர்லாந்து வந்தன என்றும்,

சேர்னோபில் அணு ஆலை விபத்தினால் வெளியேறிய அணுக் கதிர்களினால் உக்ரேனில் பறவைகளும் பாதிக்கப்பட்டன என்றும் கண்டுபிடிக்கப்பட்டது. (இ-எ)

## ஐஸ்லாந்துக்கான ரஷ்ய தூதர் திருப்பி அழைக்கப்பட்டார்!

மாஸ்கோ, டிச. 8

ஐஸ்லாந்துக்கான தனது தூதரை, ரஷ்யா திருப்பி அழைத்தது.

அமெரிக்க - ரஷ்ய உச்சிமாநாடு ஐஸ்லாந்து தலைநகரில் இடம் பெற்ற சமயம் ஏற்பட்ட ராஜதந்திரக் குளறுபடி காரணமாகவே ரஷ்யத் தூதர் திருப்பி அழைக்கப்பட்டார்.

ரஷ்யத் தலைவர் கோர்பச்சேவ், ஐஸ்லாந்து சென்றடையும் சரியான நேரத்தை ஐஸ்லாந்து அதிகாரிகளுக்கு சரியாக அறிவிக்கத்தவறியதால், ரஷ்யத் தலைவரை வரவேற்க ஐஸ்லாந்து அதிபர் விமான நிலையம் வரமுடியாமற் போய்விட்டது.

வெளிநாட்டமைச்சரே, திரு கோர்பச்சேவை விமானநிலையத்தில் வரவேற்றார். (இ-எ)

வெளி உலகில்

## பிரான்ஸில் பரவும் மாணவர் கிளர்ச்சி

பாரீஸ், டிச 8

பிரெஞ்சு அரசின் கல்விச் சீர்திருத்தச் சட்ட மூலத்தை எதிர்த்து பல்கலைக்கழக மாணவர் நடத்திய கிளர்ச்சியில் உயிரிழந்த ஒரு மாணவரின் மறைவு குறித்து நேற்று பிரான்ஸில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனிடையில் மாணவரின் கிளர்ச்சிகள் தீவிரமடையும் அறிகுறிகள் தென்படுவதாகவும் கல்விச் சீர்திருத்தச் சட்ட மூலத்தை விலக்கிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு பிரெஞ்சு அரசு இலக்காகியுள்ளதாகவும் பி.பி.சி. வானொலி நேற்று அறிவித்தது.

இதனிடையில் சட்ட மூலத்தில் காணப்படும் சர்ச்சைக்குரிய பகுதிகளை கைவிட பிரெஞ்சு அரசு முன்வந்துள்ளது.

இதனை கல்வி அமைச்சர் ரேனே மொனொறி அறிவித்தார்.

கடந்த 20ஆண்டுகளில் இடம்பெற்ற பெரிய கிளர்ச்சியாக கடந்த வாரம் இடம் பெற்ற மாணவர் கிளர்ச்சி அமைந்தது என்று பி.பி.சி மேலும் தெரிவித்தது. (இ-எ)

# உண்ணாவிரதம் இருந்தது ஏன்? பிரபாவே தரும் விளக்கம் இது

நவம்பர் 22 காலை தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் - தளபதி திரு. வே. பிரபாகரன் வெளியே புறப்படத் தயாராகிறார்.

அவரை வழியனுப்பி வைக்க அவரின் மனைவி மதிவதனி வாசல் வரை வருகிறார்.

''எங்கு போகிறேன், என்ன செய்யப் போகிறேன்'' - என்பதை திரு. பிரபாகரன் மனைவியிடம் கூடத் தெரிவிக்கவில்லை.

நேராக சென்னையில் உள்ள தனது அரசியல் ஆலோசகர் திரு எஸ். ஏ. பாலசிங்கம் வீடு செல்கிறார். அவருடன் நீண்ட நேரம் ஆலோசனை நடத்துகின்றார் திரு. பிரபாகரன்.

மாலை திரு பாலசிங்கம் வீட்டுக்கு அருகில் உள்ள புலிகள் இயக்க அலுவலகத்துக்குச் செல்கின்றார்.

அலுவலகத்தில் புலிகள்' பலர் இறுக்கமான முகங்களுடன் காணப்படுகின்றனர்.

அலுவலகத்தினுள் செய்தியாளர்கள் குழுமியுள்ளனர்.

செய்தியாளர்கள் சிலர் வந்துகொண்டும் இருந்தனர். அவர்களையும் பட்டியலில்இருந்த பொலீஸார் நோட்டம் விடுகின்றனர்.

அலுவலகத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் வயர்லெஸ் சாதனங்கள் பொருத்தப்பட்ட பொலீஸ் கார்கள் சுற்றி, சுற்றி வருகின்றன.

32 வயதான திரு. பிரபாகரன், மிடுக்கான தோரணையில் செய்தியாளர்களைச் சந்திக்கின்றார்.

'சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போகின்றேன்'— இந்த முடிவை திரு பிரபாகரன் செய்தியாளர்களிடம் தெரிவிக்கின்றார்.

அன்று மாலையே தனது உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கிறார் திரு. பிரபாகரன்.

'கைப்பற்றப்பட்ட சாதனங்கள் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும்; என் மீது போடப்பட்டுள்ள பொலீஸ் கண்காணிப்பு நீக்கப்பட வேண்டும். அல்லது 'தமிழ் ஈழம்' சென்று பாதுகாப்பற்ற மக்களுக்காகப் போராட என்னை அனுமதிக்க வேண்டும்'—

இக்கோரிக்கைகளை முன் வைத்துத்தான் திரு. பிரபாகரன் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

தகவல் தொடர்பு சாதனங்கள் பறிக்கப்பட்டு விட்டதால் இலங்கையில் உள்ள தமிழர்களுக்கும் தமிழ் நாட்டில் உள்ள போராளிகளுக்கும் இடையேயான 'உயிர்த்தொடர்பு' துண்டிக்கப்பட்டு விட்டது.

> 'அநீதியை எதிர்த்து ஆட்சேபம்'-- என்ற தலைப்பில் 'புரொன்ட்லைன்' இந்திய ஆங்கில வார சஞ்சிகையில் (நவ:29- டிச 12) வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது.

வடக்கு, கிழக்கு பகுதியில் தமிழருக்கு என்ன நடக்கிறது என்பதை வெளி உலகம் அறிய முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது.

நவம்பர் 21 இல் இருந்து அரச பாதுகாப்புப்படையினர் முல்லைத்தீவில் விமானக் குண்டுத் தாக்குதலையும் யாழ் குடாநாட்டில் ஷெல் தாக்குதலையும் ஆரம்பித்து விட்டார்கள்'- இப்படிச் சொன்னார் திரு. பிரபாகரன், செய்தியாளர்களிடம்.

ஒரு சொட்டுப் பச்சைத் தண்ணீர் கூட அருந்தாமல் மிகத் தீவிரமாகச் சாகும்வரை உண்ணாவிரதத்தை திரு. பிரபாகரன் ஆரம்பித்த நோக்கம் என்ன?

'' இலங்கைத் தமிழர் எப்படியான ஆபத்துக்களுக்கு மத்தியில் விடப்பட்டுள்ளனர் என்பதைத் தமிழ்நாட்டுக்கு மட்டும் அல்ல, உலகுக்கும் தெரியப்படுத்தவே நான் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தேன்'' இப்படிச் சொன்னார் திரு. பிரபாகரன்.

''இலங்கை அரசின் இனப் படுகொலைக்கு உதவுவது போன்றது தகவல் தொடர்பு சாதனங்களைப் பறித்த செயல்''

இதனை நான் எதிர்க்காதுவிட்டால் அது ... தவறு. 'போராளிகள் மீது சுமத்தப்படும் அநீதி, அவதூறுகள், இழிவுகளை தமிழ்நாடு மக்களும் அறிய வேண்டும்.''

இப்படித் தெரிவித்தார் திரு. பிரபாகரன்.

தகவல் தொடர்பு சாதனங்களைக் கைப்பற்றியதை மத்திய அரசு பகிரங்கமாக கண்டித்தது.

புதுடில்லியில் மத்திய உள்துறை அமைச்சுப்



பேச்சாளர் ஒருவர் இச்சம்பவம் குறித்து கவலை தெரிவித்தார்.

அண்மைக் காலமாக மௌனம் சாதித்து வந்த தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி கூட, போராளிகளை இழிவுபடுத்தும் நடவடிக்கை இது என்று வர்ணித்தார்.

### கைவிடுமாறு முதல்வர் கேட்டார்

உண்ணா விரதத்தைக் கைவிடும்படி கோயம்புத்தூரில் இருந்து முதலமைச்சர் இராமச்சந்திரன் வேண்டுகோள் விடுத்தார்.

இந்திய அரசு, தமிழ் நாடு அரசு ஆகியவற்றைக் கடுமையாக விமர்சித்தார் திரு பிரபாகரன்.

''ஆளை ஆள் குறை கூறுவதுபோல் இரண்டு அரசுகளும் நடந்து கொள்கின்றன.

ஒரு புறம் எம்மை பேச்சுக்களுக்கு அழைக்கிறார்கள்; மறுபுறம் எம்மை கிரிமினல்கள் போல் நடத்துகிறார்கள். இது எமது மக்களை அவமானப்படுத்துவதுபோல் உள்ளது.

'ஜெயவர்த்தனவுக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்படுகிறது. இவை எல்லாம் நல்லெண்ண நடவடிக்கைகளாகத் தெரியவில்லையே!

'ஜெயவர்த்தனவை வழிக்குக்கொண்டு வரத் தவறியவுடன் போராளிகளை மட்டும்தான் நிர்ப்பந்திக்கின்றார்கள்.

'எனது கோரிக்கைகள் ஏற்கப்படாதவிடத்து நான் இறக்கத் தீர்மானித்துவிட்டேன்.

'மக்கள் என்னுடன் எப்படி இருக்கிறார்கள் என்பது உலகத்துக்கு அப்போதுதான் தெரிய வரும்—

இப்படிக் கூறினார் திரு. பிரபாகரன்.

நவம்பர் 23 நிலைமை மாறியது கைப்பற்றப்பட்ட தகவல் தொடர்பு சாதனங்களைத் திருப்பி ஒப்படைக்கும்படி முதலமைச்சர் உத்தரவிட்டார்

தொலைபேசி மூலம் உத்தரவிடப்பட்டிருப்பதாக கோயம்புத்தூரில் வைத்துச் சொன்னார் முதலமைச்சர் இராமச்சந்திரன்.

அமெச்சூர்த்தனமாக, பொலீஸ் டைரக்டர் ஜெனரல் மோகன் தாஸின் ஏற்பாட்டில் பொலீஸார் நடந்ததினால் ஏற்பட்ட பாதிப்பைச் சீர்செய்து போராளிகளிடன் நல்லுறவைப் பேண மத்திய அரசும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

தகவல் சாதனங்களைத் திருப்பிக்கொடுத்தது, பொலீஸ் கண்காணிப்பு நீக்கப்பட்டது- இவை நிச்சயம் திரு. பிரபாகரனுக்கு தெளிவான, வெளிப்படையான வெற்றி என்பதில் சந்தேகமே இல்லை.

(நவ 29-டிச-12)

## விகிதாசாரபிரதிநிதித்துவ முறைப்படி மாகாணசபைத் தேர்தல்களை நடத்த வேண்டாம்

கொழும்பு, டிச. 9

மாகாணசபைத் தேர்தல்களை விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் நடத்த வேண்டாம் என்று லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆகியன கூட்டாக ஜனாதிபதியைக் கேட்டுள்ளன.

இது சம்பந்தமாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபைத் தேர்தல்களைக் கட்சி அடிப்படையில் நடத்த வேண்டும்.

மாகாணசபைத் தேர்தல்களை பழைய முறையான தொகுதி அடிப்படையில் நடத்த வேண்டும் — இப்படி அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது. (இ-ஐ-எ)

## நவசமசமாஜக் கட்சி யாழ் கிளையினர் விஜேயைச் சந்தித்தனர்

யாழ்ப்பாணம், டிச. 9

யாழ் வந்திருந்த மக்கள் கட்சிச் செயலாளர் விஜய குமாரணதுங்காவை; நவசமசமாஜக்கட்சியின் யாழ் கிளையினர் சுபாஸ் ஹோட்டலில் சந்தித்தனர்.

இச்சந்திப்பில் கட்சியின் யாழ் கிளைச் செயலாளர் திரு ஜனகன் திரு வி. திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

சகல மார்க்சிய சக்திகளையும் ஒரு பொது அணியில் இணைப்பதற்கான ஆலோசனைகள் இதில் ஆராயப்பட்டன என்று தெரிகிறது.

அதேசமயம்''அன்பார்ந்த தோழர் விஜய குமாரண துங்க'' என்று விழித்து நவ சமசமாஜக் கட்சி யாழ்கிளை துண்டுப்பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

அரசாங்கம் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப் போவதாக நடித்துக் கொண்டு அமெரிக்க, இஸ்ரேலிய ஏகாதிபத்திய வாதிகளின் உதவியுடன் தமிழ் மக்களை அழித் தொழிப்பதற்கு ஆயத்தமாகும் இந்த நெருக்கடியான சூழ் நிலையில் தமிழ் மக்களின் போராட்டத்தை நீங்கள் உண்மையாக ஆதரிப்பதை நாம் மிகுந்த மகிழ்ச்சியுடன் நோக்குகிறோம் என்று துண்டுப் பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது. (இ-5-10)

சமய சந்நிதிகளில்

### பள்ளிவாசல் கொடியேற்றம்

வேலணை, டிச. 9

மண்கும்பான் வெள்ளைக் கடற்கரை புனித குருபாவா பள்ளிவாசல் கொடியேற்ற உற்சவம் கடந்த 4 ஆம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ளது.

உற்சவம் பதினொரு நாட்கள் தொடர்ந்து நடைபெற்று இறுதி நாள் விசேஷ சந்தூரி வைபவமும் நடைபெறும்.

### ஓய்வுபெற்றார்

அச்சுவேலி, டிச. 9

அச்சுவேலி புனித திரேஸா மகளிர் வித்தியாலயத்தின் அதிபர் சங்கைக்குரிய சகோதரி எம். பிடலிஸ் சேவையில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார். (இ-11)

### பொய்யாமொழி

குறள்:

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை.

பொருள்:

கொலையால் நன்மையாக விளையும் ஆக்கம் பெரிதாக இருந்தாலும், சான்றோர்க்குக் கொலையால் வரும் ஆக்கம் மிக இழிவானதாகும்.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நடைபெறுகின்ற
(O/L) பரீட்சையில்
எமது கல்வி நிலைய மாணவர்கள்
அனைவரும் சித்தியடைய
எமது நல்வாழ்த்துக்கள் !
Science Centre
Tellippalai.

# உதயன்

09 · 12 · 1986 செவ்வாய்க்கிழமை

Science Centre
Tellippalai.
(O/L) -- 87
புதிய 1ஆம் பிரிவு
ஆரம்பம் :-
14-12-86 (ஞாயிறு) காலை 9 மணி
விஞ்ஞானம் - J. R. சூரி
கணிதம் - செல்வம்

## பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்

### ஆனால் சிலகாலம் எடுக்கும் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, டிச. 9

தீவிரவாதப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். ஆனால் இதற்குச் சில காலம் எடுக்கும். அதுவரை மக்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா சொன்னார்.

ஹபராதுவ தொகுதியில் ஹத்தலுவ மத்திய மகா வித்தியாலயத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஜனாதிபதி பேசுகையில் முன்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது;

தீவிரவாதம் அரசாங்கம் விரும்பி உருவாக்கியது அல்ல. தீவிரவாதச் சவாலை அரசாங்கம்தான் எதிர்நோக்க வேண்டி உள்ளது; எதிர்க்கட்சிகள் அல்ல.

அரசின் நடவடிக்கைகளை எதிர்க்கட்சிகள் ஆதரிக்கலாம் அல்லது எதிர்க்கலாம். ஆனால் எம்முடைய எதிர்க்கட்சிகள் எதிர்க்கின்றனவே ஒழிய ஆதரிக்கவில்லை.

தீவிரவாதம் இலங்கைக்கு மட்டும் உரியது அல்ல. எல்லா நாடுகளிலும் உண்டு. அதிர்ஷ்டவசமாக இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டுமே தீவிரவாதம் நிலவுகின்றது.

தீவிரவாதத்தை ஒழிக்க தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. அதுவரை மக்கள் சில கஷ்டங்களை அனுபவிக்கத்தான் வேண்டும்.

இன்னொரு அரசாங்கம் இருந்தாலும் இதே நிலைதான் நிலவும். சிலவேளை நிலைமை இப்போதிலும் பார்க்க மோசமானதாகவும் இருந்திருக்கும்.

இப்படி ஜனாதிபதி சொன்னார். (இ-எ)

## இளவாலையில் ப. நோ. கூ. ச கிளை

யாழ்ப்பாணம், டிச. 9

இளவாலையில் புதிய கிளை ஒன்றை தெல்லிப்பளை ப நோ. கூ. சங்கம் நாளை புதன்கிழமை ஆரம்பித்து வைக்கின்றது

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் செல்வி சுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

தெல்லிப்பளை ப. நோ. கூ. ச தலைவர் திரு சி. சிவமகாராசா திறப்பு விழாவிற்கு தலைமை வகிப்பார்.

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தின் 43வது கிளையாக இப்புதிய கடை அமையும். (ஒ)

## அவர்கள் வேதனையை பார்த்தால் எம் வேதனை பெரிதல்ல

### அஜித்தின் தாயார் கூறுகிறார்

கொழும்பு, டிச. 9

இடிந்த பல கட்டடங்களையும் கணவன்மாரை இழந்த கைம்பெண்களையும் கண்டேன் அவர்கள் படும் வேதனைகளைப் பார்த்தால் எம் வேதனை பெரிது அல்ல.

இப்படிச் சொன்னார் யாழ்ப்பாணத்தில் புலிகளினால் சிறை வைக்கப்பட்டுள்ள சிப்பாய் அஜித் சந்திரசிறியின் தாயாரான டி எம் ஆரியவதி.

யாழ்ப்பாணத்தின் வேதனை குறித்து அம்பலாங்கொட எம். பி. மூலம் தென் இலங்கை மக்களுக்குச் சொல்வேன்.

யாழ் மக்கள் எம்மை பண்பாக நடத்தினர். அவர்களும் எம் மக்களைப் போல் தான் உள்ளனர்.

இப்படி அவர் மேலும் சொன்னார்.

சிறை வைக்கப்பட்டுள்ள மற்றச் சிப்பாயான பண்டாராவின் நண்பனான சுனில் கருத்துத் தெரிவிக்கையில் யாழ்ப்பாணம் சென்று பார்த்தவுடன்தான் கொழும்பில் சொல்வது எல்லாம் பொய் என்பது அம்பலமானது என்றார்.

இவர்கள் கொழும்பு திரும்பியதும் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தனர். (இ-ஐ-எ)

## வடபகுதி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பைசல் சமத், தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி கிட்டுவைப் பேட்டி கண்டார்.

அப்போது '' மிகப் பெரியதான தாக்குதலை எதிர்பார்த்து மக்களை உஷார் படுத்தி இருக்கின்றோம்'' — என்று திரு. கிட்டு ராய்ட்டருக்குத் தெரிவித்திருந்தார். (அ-ஐ-எ)

## மாலை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளி வேல் ஒன்று அகப்பட்டது. அதிசயம் அடைந்தவர், பெற்றோரை அழைத்துக் காண்பித்தார்.

தற்போது அந்த வேல் சந்தனப் பலகையில் வைத்துப் பூசிக்கப்படுகின்றது. (ஒ-11)

## ஓமந்தை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு பிரிகேடியர் கொப்பேக்கடுவ ஒழுங்கு முறையுடன் கடமையாற்றுமாறு கண்டிப்பாக உத்தரவு பிறப்பித்துள்ளார் என அறியவருகிறது (இ-10)

## ஆண்டுகளை...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

பாக தான் ஒரு குறிப்பிட்ட பணத்தை புனர்வாழ்வு அமைச்சுக்கு கையளித்துள்ளதாகவும், புனர்வாழ்வு அமைச்சிடம் தொடர்புகொண்டு தேவையான உதவிகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவித்துள்ளது. (இ-76)

## நிர்ப்பந்திக்கப்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உடன்பாடு உண்டு.

### நீண்ட யுத்தம்

கேள்வி: மிகப்பெரிய போராளி அமைப்பு உங்களுடையது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. சாம் 7, மற்றும் நவீன ஆயுதங்கள் உண்டு. பேச்சுக்கள் தோல்வி கண்டால் இலங்கை அரசுக்கு எதிரான யுத்தத்தில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள் என்ற நம்பிக்கை உண்டா?

பதில்: முழு அளவிலான யுத்தம்பற்றி நாம் பேசமுடியாது. நாம் போராடும் தளம் ஆயிரக்கணக்கான தமிழ் குடிமக்கள் வாழும் பிரதேசம்.

இது நீண்டகால யுத்தமாக இருக்கும். நிச்சயம் முடிவு ஒன்றுவரும் அந்த முடிவு எமக்குச் சாதகமாகவே இருக்கும். இலங்கை அரசுத் துருப்புக்கள் வெல்ல முடியாது. அதை நீங்கள் நிச்சயம் நம்பலாம்.

கேள்வி: இந்தியாவை விட்டு வெளியேறி 'ஈழம்' போராட்டத்தைத் தொடரும் முடிவை ஏன் இடைநிறுத்தி வைத்துள்ளீர்கள்?

பதில்: (பெரிதாகச் சிரித்தபடி) நாங்கள் போகவேண்டும் என்று விரும்புகிறீர்களா? படிப்படியாக நமது மக்களையும் தலைவர்களையும் தமிழ் ஈழத்துக்குக் கூட்டிப்போகத் தீர்மானித்து இருந்தோம். நானும் வெளியேறவே தீர்மானித்தேன்.

இந்திய அரசிடம் இருந்து வந்த சில அறிக்கைகள் எமது இலட்சியத்துக்கான ஆதரவு, நல்லெண்ணம் தொடரும் என்பதை கோடிட்டுக் காட்டின. ஆகவே நாம் அவசரமாக வெளியேறப்போவது இல்லை.

அப்படி நான் வெளியேறப்போவதானால் திகதி நேரம் அறிவித்துவிட்டு வெளியேற மாட்டேன்.

சில தினங்களுக்குப் பிரபாகரனைக் காணவிட்டால், அவர் போய் விட்டார் என்று நீங்கள் எண்ணவேண்டியதுதான்

### சத்தியாக்கிரகம் புது ஆயுதம்

கேள்வி: சத்தியாக்கிரகம் என்ற புதிய 'ஆயுதத்தைக் கண்டுவிட்டீர்கள்- அதன்மூலம் கைப்பற்றப்பட்ட தகவல் தொடர்பு சாதனங்களை பெற்றுவிட்டீர்கள்,

புதுடில்லி, சென்னை அரசுகளின் நிர்ப்பந்தம் வரும்போதும் இந்த ஆயுதத்தை பாவிக்கும் எண்ணம் உண்டா?

பதில்; ஏன் இல்லை? இது மிகவும் நாகரீகமான ஆட்சேபனை. கைப்பற்றப்பட்ட தகவல் தொடர்பு சாதனங்களை எல்லா இயக்கங்களுக்கும் இந்த 'ஆயுதத்தின் மூலம்' பெற்றுக் கொடுத்தேன்.

நாம் வெறும் கெரில்லா வீரர்கள் மட்டும் அல்லர்! நிலைமைக்கு ஏற்றபடி செயலாற்றுபவர்கள் என்பதையும் இதன் மூலம் நிரூபித்துவிட்டோம்.

எனது மக்களுக்கு நன்மைபயக்காத இலங்கை அரசின் யோசனைகளை ஏற்கும்படி இந்திய, தமிழக அரசுகள் நிர்ப்பந்தித்தால் நான் நிச்சயமாக உண்ணாவிரதம் இருப்பேன்.

### திருமலை தலைநகர்

கேள்வி : இஸ்ரவேல் ஜனாதிபதியின் கொழும்பு விஜயம் பற்றி ..

பதில் : எமது பிரச்சினையில் அமெரிக்கா கழுத்தளவு இறங்கி விட்டது. ஜெயவர்த்தனாவுக்கு அமெரிக்கா நேரடியாக ஆயுதம் வழங்காது. இஸ்ரவேல், பாகிஸ்தான், சீனா ஆகிய ஏஜண்டுகளை பயன்படுத்துகின்றனர்.

அமெரிக்காவுக்கு முக்கியமானது திருகோணமலை. திருகோணமலையை நாம்விட முடியாது. தமிழ் ஈழத்தின் தலைநகரம் திருகோணமலைதானே.

இப்படி திரு. பிரபாகரன் பேட்டியில் தெரிவித்தார். (இ-எ)

## அரசு அலன் தம்பதி---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

திருக்கும் — இப்படி திரு. குமாரணதுங்க தெரிவித்தார்.

விஜே குழுவினர் ஞாயிறு இரவு 10மணி அளவில் கொழும்பு வந்தடைந்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு கொழும்பு வரும் வரை, இடைவழியில் விஜே குழுவினரை ஆயுதப்படையினர் சோதனை இடவில்லை.

விஜே குழுவினர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் துண்டுப்பிரசுரங்கள் சுவரொட்டிகள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சம்பவங்கள்பற்றிய விடியோ படத் தொகுப்புக்கள் முதலியவற்றைக் கொண்டு சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

## பெங்களூரில் 11பேர் பலி

### நபிகள் நாயகம் சிறுகதை வெளியிட்டதன் எதிரொலி

பெங்களூர் டிச. 9

நபிகள்நாயகம் பற்றி சிறுகதை ஒன்றை பெங்களூர் தினசரி ஒன்று பிரசுரம் செய்தது தொடர்பான கலவரத்தில் 11 பேர் உயிரிழந்தனர் 19 பேர் காயமடைந்தனர்.

பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தின்போதே இச்சம்பவம் நடந்தது.

ஞாயிறு மாலை சுத்திவான் முதலியனவற்றுடன் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் அச்சிறுகதையைப் பிரசுரித்த 'டெக்கான் ஹெறால்ட்' தினசரியின் அலுவகத்தை நோக்கித் திரண்டு சென்றபோது பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்த முயற்சித்தனர்.

கூட்டம் கட்டுக்கடங்காது, பொலிஸாரைத் தாக்கத் தொடங்கியது. இதில் 31 பொலிஸார் காயமடைந்தனர்.

அதைத் தொடர்ந்து பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததிலேயே 11 பேர் உயிரிழந்தனர்

காயமடைந்த 19பேரில் 14 பேரின் நிலை ஆபத்தாக உள்ளது.

'டெக்கான் ஹெறால்ட்' பத்திரிகையின் ஆசிரியரும் வெளியீட்டாளரும் பெங்களூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். பின் நீதிமன்றம் முன் ஆஜர் செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்'

(அ-எ)

## வவுனியா--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உயர் அதிகாரிகளும் நேற்று வவுனியா இராணுவ இணைப்பதிகாரியைச் சந்தித்து இரண்டு ரயில்சேவைகளை நடத்தக் கோரிக்கை விடுத்தார்கள்.

இதனை ஏற்றுக்கொண்ட பிரிகேடியர் கொப்பேகடுவ கூடியவிரைவில் ரஜரட்ட ரஜனி சேவையையும் நடத்துவதற்கு நாம் ஒழுங்குகள் மேற்கொள்ளுவதாக உறுதிமொழி தெரிவித்தார்.

1383 ஆம் ஆண்டுக்குப் பின் 'ரஜரட்ட ரஜனி' சேவை நிறுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## நினைவாஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 9

1984 டிசம்பரில் பலியான ஆறு விடுதலைப் புலிகளினதும் இரண்டாவது ஆண்டு நினைவாஞ்சலிக் கூட்டம்மும் வில்லிசை நிகழ்ச்சியும் இன்று(செவ்வாய்) மாலை தொல்புரம் ம. ச. ச. நிலைய முன்றலில் நடைபெறும். (இ-எ)

வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும் நன்றி நவிலலும்

திருமதி கனகம்மா ஆறுமுகம்

மலர்வு: 13-8-1906 உதிர்வு: 10-11-1986



அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய் இறைபக்தியில் தளராது, எங்களதும், உற்றார், உறவினர் உள்ளங்களிலும் நிலையாகிவிட்ட உத்தமியே! உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் குடும்பத் தலைவியின் மறைவு கேட்டு ஓடோடி வந்து அனுதாபங்களைத் தெரிவித்து, உதவிகள் பல புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் 10-12-1986 புதன்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

2-ம் வட்டாரம்,
புங்குடுதீவு.

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

Science Centre
Karaveddy.
கணித, விஞ்ஞான, ஆங்கில
ஆசிரியர் பரீட்சைக்கான வகுப்புகள்
கலாசாலை விரிவுரையாளரால்
போதிக்கப்படும்.
ஆரம்பம்: 10-12-1986 காலை

உ
திருமண அழைப்பு

நிகழும் அக்ஷய ஆண்டு கார்த்திகைத் திங்கள் 25ஆம் நாள் (11-12-86) வியாழக்கிழமை முற்பகல் 8-57 மணி முதல் 10-42 மணி வரையுள்ள மகர இலக்கின சுபமுகூர்த்தத்தில்,

எமது கனிஷ்ட புதல்வன்
திருநிறை செல்வன்
சோதிலிங்கம் B. Sc.
ஆசிரியர், தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி அவர்கள்

எமது ஏக புத்திரி
திருநிறை செல்வி
கலாதேவி
அவர்களை

மணமகள் இல்லத்தில் திருமணஞ்செய்பத் திருவருள் பாலித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து ஏகுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

✶ வரவேற்பு உபசாரம் 14-12-86 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் 7 மணிவரை மணமகன் இல்லத்தில் நடைபெறும்

தங்கள் நல்வரவை நாடும்

திரு. ச. சொக்கலிங்கம்
(முன்னைநாள் கல்லூரி அதிபர்)
ஏழாலை மேற்கு,
ஏழாலை.

திரு. திருமதி அ. கந்தையா
(முன்னைநாள் கப்பல்துறை முகபமையாளர்)
கம்பளிவைரவர் கோவில் ஒழுங்கை,
கேரதீவு ரோட், நாவற்குழி, கைதடி

✶ தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை ✶

நத்தார் - புது வருடத்தை முன்னிட்டு

கேக் தயாரிப்புக்குத் தேவையான இறக்குமதி செய்யப்பட்ட
சுல்தானஸ் (Four Crown Australian) Kg 57-50
கரண்ஸ் (Australian)
வைற் றேசன்ஸ் (with Seed & Seedless)
கறுப்பு றேசன்ஸ் (Saileras)
ஈச்சம்பழம் DATES (White)

இலங்கையில் மிகவும் முன்னோடிகளால் தயாரிக்கப்பட்ட
சாள்ஸ் தயாரிப்புகள் (CHARLES Products)
செரிஸ் - கண்டிபீல்
ஜிஞ்சர் - சவ்சவ்
புள்தோசி - ஜாம் வகைகள்

ரவ்வை
சொவற் சுகர்
ஒஸ்ரேலியா மாஜரின்
பேக்கிங் பவுடர்
ஜலு
ஐசிங் சுகர்
கொக்கோப் பவுடர்

இறக்குமதி செய்யப்பட்டதும், உள்ளூர்த் தயாரிப்பும்
✶ கேக் எசன்ஸ், கலரிங் வகைகள் ✶

✶ குளிர்பானத்திற்கேற்ற இறக்குமதி செய்யப்பட்டதும், உள்ளூர்த் தயாரிப்பும் ✶

கோடியல் எமல்சன் வகைகள்
நத்தார் புதுவருட அன்பளிப்புப் பொருட்கள்
கேக் அலங்காரப் பொருட்கள் (Cake Decoration),
நத்தார் பொதிப் பேப்பர் ஆகிய பொருட்களை
நத்தார் கேக் அலங்காரப் பொருட்கள்

ஒரே இடத்தில் மிக மலிவாகவும் தரத்தில் சிறந்ததுமாகப் பெற்றுக்கொள்ள தலைநகரில் தனிச் சிறப்புடன் திகழும் ஒரே ஸ்தாபனம்.

பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்

223, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தலைமை அலுவலகம்: 18/1, டாம் வீதி, கொழும்பு-12.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 09-12-1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second Lane Power House Road, JAFFNA Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60 N 86. T'PhoneNo. 24805, 23073

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org